ஆகவே போடிமெட்டிலிருந்து தேனி வரையில் உள்ள சாலையை நெடுஞ்சாலையாக்குவதற்கு அரசு ஆலோசனை கூறுமா? இந்த சாலை கொச்சின் துறைமுகத்தை தூத்துக்குடி துறைமுகத்தோடு இணைக்கிற குறுகிய இடைவெளியாக இருக்கிறது. இது இந்த வகையில் அரசுக்கு நல்ல வாய்ப்பைத் தருகிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு இந்த சாலையை அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதனுடைய முக்கியத்துவத்தை ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு இணைப்புச் சாலையாக இருக்கும் என்கிற விவரத்தைத் தெரிவித்து இருக்கிறோம். ஆகவே தகுந்த ஆணைகள் வருமென்று எதிர்பார்க்கிறோம்.

திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லோயர் கேம்பிலிருந்து குமளி வரையில் இருக்கும் மலைச்சாலை மிக்வும் மோசமாக இருக்கிறது. சமீபத்தில் ஒரு விபத்து கூட அங்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதை நல்ல முறையில் சரி செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்திலே சொல்லி, அதற்குரிய நடவடிக்கைகளை உடனடியாக முனைப்பாக செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளேன். ஆகவே இந்த மாதத்திலேயே அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மூன்று மாநிலங்களை இணைக்கும்படியாக நெடுஞ்சாலை திண்டுக்கல், பெரியகுளம், தேனி, கூடலூர், குமளி வரையில் போகக்கூடிய பாதை இருக்கிறது. சமீபத்திலே கூட அங்கே விபத்துக்கள் நடந்ததை நாம் அறிவோம். ஆகவே இந்த நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மாநில அரசு சிபார்சு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே, திண்டுக்கல், பழனி, உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி, கோயம்புத்தூர் இவைகளைச் சேர்ந்த சாலையினை தேசிய நெடுஞ்சாலையாக அறிவிக்கவேண்டுமென்று மத்திய அரசுக்கு தாக்கீது கொடுத்திருக்கிறோம். ஆகவே நீங்கள் கூட திண்டுக்கல் சேர்ந்திருக்கிறது என்பதில் பெருமை கொள்ளலாம்.

திருத்துறைப்பூண்டி பேருந்து நிலையம்

*வினா எண் 132— திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டியில் தற்போது உள்ள பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது திட்டம் நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) ஒருங்கிணைந்த நகர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடன் உதவி பெற்று சுமார் 19.5 இலட்சம் ரூபாய் செலவில் இத்திட்டத்தை செயல்படுத்த பேரூராட்சி உத்தேசித்துள்ளது.

[முற்பகல் 9-40]

திரு. பொ. உத்திராபதி: தலைவரவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் திருத்துறைப்பூண்டிக்கு ஒரு பெரிய திட்டத்தை அறிவித்திருப்பதற்கு நன்றி சொல்லி, திருத்துறைப்பூண்டி பேரூராட்சி நகராட்சியாகக்கூடிய அந்தஸ்து பெற்றிருப்பதால் இந்த 19½ இலட்சம் ரூபாய்த் திட்டம் எந்த காலக் கட்டத்திற்குள் நிறைவேற்றப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, கடன் கிடைத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

ஊராட்சி ஒன்றியங்களில் கூடுதல் ஆணையாளர்களை நியமிக்கும் திட்டம்.

* வினா எண்—133 திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்படுகின்ற ஊராட்சி ஒன்றியங்களில் கூடுதல் ஆணையாளர்களை நியமிக்க அரசு எண்ணியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், கூடுதலாக எத்தனை அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இரண்டாவது கட்டமாக 1981-82–ல் சேர்க்கப்பட்டுள்ள 150 ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு கூடுதல் ஆணையர் (Additional Block Development Officer) நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

திரு. வி. பாலகிருஷ்ணன்: தலைவரவர்களே, இந்த கூடுதல் ஆணையாளருடைய பணி நிலைமை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, தன்னிறைவுத் திட்டத்தைப் பார்த்து செயல்படுத்த வேண்டிய பொறுப்பு அவர்களிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.